ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No . | දිනය / திகதி / Date. 2024.11.11 |

1. திருமதி. வி தனுசா
   கந்தசாமி கோவிலடி,
   கோப்பாய் மத்தி,
   புதிய குடியிருப்பு, அராலி வீதி
   யாழ்ப்பாணம்.

2. செல்வன். வி.சாம்
   மாணவர்,
   யா/புனித அந்தோனியார் கல்லூரி,
   ஊர்காவற்துறை,

(முறைப்பாட்டாளர்கள்)

1. செல்வி சஞ்சிகா. பாலசுப்ரமனியம்,
   ஆசிரியர்
   யா/புனித அந்தோனியார் கல்லூரி
   ஊர்காவற்றுறை.

2. வண. அன்ரன் அமலதாஸ்
   அதிபர்
   யா/ புனித அந்தோனியார் கல்லூரி,
   ஊர்காவற்றுறை

(பிரதிவாதிகள்)

<u>முறைப்பாட்டு இலக்கம் : **HRC/JA/077/2021**</u>

## முறைப்பாடு

புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை தரம் 9 (ஏ) பிரிவில் கல்வி கற்கும் செல்வன். வினோஜன்-சாம் என்பவரது முறைப்பாட்டின் படி 20.04.2021 அன்று பாடசாலை ஆங்கிலப் பாட ஆசிரியரால் தாக்கப்பட்டமை தொடர்பாக 28.04.2021 அன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் வாக்கு மூலமானது பெறப்பட்டது.

அதனடிப்படையில் 20.04.2022 அன்று குறித்த ஆசிரியரின் பாடவேளைக்கு வகுப்பிற்கு வரும்போது அனைத்து மாணவர்களும் எழுந்து காலை வணக்கம் கூறியதாகவும் அதன்பின்பு எல்லோரும் அமரும்போது தானும் அமர்ந்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில்


| | | | | |
|---|---|---|---|---|
| ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office | අංක 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත කොළඹ -04. / இல. 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு -04. / No. 14, R.A.De Mel Mawatha, Colombo -04. | සභාපති / தவிசாளர் / Chairman 011- 2505451 | ෆැක්ස් / தொலைநகல் / Fax 011- 2505541/74 | ඊමේල් / மின்னஞ்சல் / e-mail sechrcsl@gmail.com |
| දුරකථන / தொலைபேசி / Telephone | 94-11-2505580 / 81 /82 | ලේකම් / செயலாளர் / Secretary 011- 2505521 | ක්ෂණික / துரித அழைப்பு / Hotline 1996 | වෙබ් / இணையம் / Web www.hrcsl.lk |

தனது அருகில் வந்த ஆசிரியர் தன்னை ஏன் எழும்பவில்லை எனவும் தனக்கு ஏன் வணக்கம் சொல்ல வில்லை எனவும் கேட்டு தடியினால் அடித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் அடிக்கும்போது தடியின் ஒரு பகுதியானது தனது கண்ணில் பட்டதனால் கண்ணில் வலி ஏற்பட்டதாகவும் அந்த நேரம் அது தொடர்பாக ஆசிரியர் எதுவும் கேட்கவில்லை எனவும் உடனே தான் எழுந்து கண்ணை கழுவ போவதாக கூறிச் சென்றதாகவும் அந்நேரம் தன்னுடன் வந்த நண்பன் தனது கண் வீக்கம் ஆகவும் சிவந்து இருப்பதாக கூறியதாகவும் இந்நிலையில் தமது வகுப்பாசிரியர் ஆன திரு பிரதீப் ஆசிரியரிடம் இவ்விடயத்தை கூறிய போது தன்னிடம் இருந்த தண்ணியால் கண்ணை கழுவிவிட்டு வகுப்பறைக்கு செல்லுமாறு கூறியதாகவும் பிற்பாடு 7ம் பாட வேளையில் தன்னை அழைத்து கண்ணில் வலி இருக்கிறதா எனவும் ஒரு கண்ணை மறைத்துக் கொண்டு பார்க்க சொன்னதாகவும் அப்பொழுது பார்ப்பதில் கஷ்டமாக இருக்கிறது எனகூறியதுடன் பின்னர் மாறிவிடும் எனக்கூறி தனது விடுதிக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் இதுதொடர்பாக விடுதிக்கு பொறுப்பாளரும் அதிபருமான திரு:அண்ரன் அமலதாஸ் அவரிடம் தெரிவித்த பொழுது கொஞ்ச நேரத்தில் ஆறிவிடும் எனக்கூறி விடுதிக்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார். பின்னர் மூன்று மணி அளவில் உயர்தர மாணவர் ஒருவரை அனுப்பி என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுமாறும் அங்கு வைத்தியரிடம் ஆசிரியர் அடித்தது தொடர்பாக கூற வேண்டாம் எனவும் விளையாடும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறுமாறு அழைத்துச் சென்றதாக குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் வைத்தியரினால் பரிசோதிக்கப்பட்டு மருந்து வழங்கப்பட்டதாகவும் பின்னர் விடுதிக்கு வந்து மாணவர் ஒருவரின் தொலைபேசி ஊடாக தனது தாயாருக்கு நடந்த சம்பவத்தை தெரிவித்ததாகவும் இதன்பின் அன்று இரவு 8.00 மணி அளவில் தன்னை அழைத்த அதிபர் தன்னிடம் கூறாமல் வீட்டிற்கு நடந்த விடயத்தை தெரிவித்தமை தொடர்பாக கேட்டு பனை மட்டையால் பல தடவைகள் தனக்கு அடித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 22.04.2021 அன்று பாடசாலைக்கு வருகை தந்த தாயார் இதுதொடர்பாக பாடசாலையில் அதிபரிடமும் கேட்டறிந்து சென்றார். இது தொடர்பாக பாடசாலை அதிபர் தாயாரிடம் தவறான தகவல் வழங்கியமையை தாயாரிடம் கூறிய்தையடுத்து 23.04.2021 அன்று பாடசாலைக்கு வருகை தந்த தாயார் பாடசாலையில் இருந்து தான் அழைத்து சென்று நேரடியாக யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கு இரு நாட்கள் மருத்துவ விடுதியில் இருந்து சிகிச்சை பெற்றதாகவும் மேற்படி முறைப்பாட்டாளரினால் வழங்கப்பட் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளராரின் தாயாரான திருமதி: வினோஜன்- தனுசா என்பவர் தனது மகன் வி.சாம் என்பவரை பாடசாலையில் ஆசிரியர் அடித்ததாகவும் அதில் அவருக்கு கண் அருகில் காயம் ஏற்பட்டதாகவும் வைத்தியசாலையில் காட்ட சென்ற போது அதை மறைத்து கீழே விழுந்ததால்

காயம் ஏற்பட்டது என பாடசாலை அதிபரினால் தனது மகனுக்கு கூறியதனை தனது மகன் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாடசாலைக்கு சென்று தனது மகனை சந்தித்தபோது மகன் பாதர்(பாடசாலை அதிபர்) தனக்கு அடிப்பதாகவும் தொலைபேசியில் பாடசாலையில் நடந்த விடயத்தினை தனக்கு தெரிவித்தமையால் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் கூறி அழுததாக தெரிவித்துள்ளார். தான் மகனை கூட்டிக்கொண்டு ஆசிரியரிடம் சென்று ஒரு ஆசிரியர் காலை வணக்கம் சொல்லாததற்கு அடித்தமை தொடர்பாக கேட்டதாகவும் அதற்கு அவ் ஆசிரியர் எல்லா பாடசாலைகளிலும் இது நடக்கின்ற விடயம் எனவும் இதனை பெரிய விடயமாக பொருட்படுத்த வேண்டாம் என தெரிவித்ததாகவும் குறிப்பிட்டள்ளார்.

பின்னர் அதிபரிடம் சென்று இவ்விடயம் தொடர்பாக வினவிய போது அதிபரினால் ஆசிரியர் அடித்தது பிழை தான் அவ் ஆசிரியரை இடமாற்றம் செய்கின்றதாகவும் தனது மகனை தொடர்ந்து அப்பாடசாலையில் கல்விகற்க விடுமாறும் கூறி தன்னை வீட்டிற்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய தினம் இரவு மகனுடன் கதைத்த போது பாடசாலை அதிபர் அவரை அடித்ததாகவும் மகனை எல்லா ஆசிரியர்களிடமும் மன்னிப்பு கேட்குமாறு கூறியதாகவும் மகன் தன்னிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மறுநாள் மகனை பாடசாலையில் இருந்து அழைத்து கொண்டு சென்று பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் அதன் பின்னர் பொலிஸார் மகனிடம் வாக்குமூலத்தினை பெற்றதாக வழங்கப்பட்ட வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரதிவாதிகளின் வாக்குமூலமாவது,**

**முதலாவது பிரதிவாதியான செல்வி: சஞ்சிகா-பாலசுப்ரமனியம், யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.**

யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறையின் ஆங்கில பாட ஆசிரியாரன செல்வி: சஞ்சிகா-பாலசுப்ரமனியம் என்பவரது வாக்குமூலத்தின்படி குறித்த பாடசாலையில் தனக்கு பாடவேளை இல்லாத காரணத்தினால் வேறு ஒரு வகுப்பிற்க்கு 9(A) படிப்பிப்பதற்காக செல்லும் போது அவ் வகுப்பானது மிகவும் சத்தமாக இருப்பதாக கூறி வேறு ஒரு மாணவன் தன்னிடம் தடியினை கொடுத்தாகவும் அப்போது குறித்த மாணவனை (இரண்டாம் முறைப்பாட்டாளரான வினோஜன் சாம்)அடித்தேன் எனவும் அப்போது தவறுதலாக கண்ணில் பட்டதாகவும் பின்னர் கண்ணை பார்த்த போது சிவந்து இருந்ததாகவும் கண்ணை கழுவும் படி வேறு மாணவர்களுடன் அனுப்பி வைத்ததாகவும் பின்னர் வகுப்பறைக்கு கூட்டிக்கொண்டு வந்து மேசையில் ஓய்வெடுக்க வைத்ததாகவும் தெரிவித்துள்ளார். அந்நிலையில் தனது பாடவேளை முடிந்ததால் தான் வேறு வகுப்புக்கு சென்று விட்டதாகவும் அப்பொழுது அவ்விடயம் தொடர்பாக மாணவனின் வகுப்பாசிரியரிடம் தெரிவித்து விட்டு சென்றதாகவும் அன்றைய நாள் வரை அவருக்கு எந்த

பிரச்சினையும் இல்லாத காரணத்தினால் பாடசாலை முடிந்ததும் வீடு சென்று விட்டாதாக தெரிவித்துள்ளார்.

பின்னர் அடுத்த கிழமை பாடசாலை ஆரம்பிக்கும்போது அங்கு அவ் மாணவனை தாயார் பாடசாலையில் இருந்து கூட்டிச்செல்வதற்கு வந்திருந்ததாகவும் இந்நிலையில் அன்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அவ் மாணவரிடம் தான் மன்னிப்பு கேட்டதாகவும் கூறியுள்ளார். பின்னர் மாணவர் பொலிஸ்ாரிடம் செய்து கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தன்னை விசாரனை செய்ததாகவும் குறிப்பிட்டள்ளார்.

**இரண்டாம் பிரதிவாயான வண.அன்ரன்-அமலதாஸ் (யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)**

யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை பாடசாலை அதிபர் அன்ரன் அமலதாஸ் அவர்களின் வாக்குமூலத்தின்படி சம்பவ தினம் அன்று பி.ப 1.45 மணியளவில் குறித்த மாணவன் விடுதிக்குள் நுழையும் தருணத்தில் தன்னை ஆங்கில ஆசிரியர் அடித்ததாகவும் அதனால் தன்னுடைய கண் வலிப்பதாகவும் கூறியமையால் தான் அவரை ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு உயர்தர மாணவர் ஒருவருடன் அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிட்டள்ளார்.

அதன்பின்னர் அன்றைய தினம் இரவு தனக்குத் தெரியாமல் தாயாருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டமையால் தான் அதற்கு தண்டனை வழங்கியதாகவும் மறுநாள் கோபமாக வந்த தாயாரிடம் நடைபெற்ற விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தி தான் சமாதானம் கூறி அனுப்பி வைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அன்று இரவு அம்மாணவனை படிக்கச் சொல்லி வற்புறுத்தியதால் அதையும் தனது தாயாரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளதாகவும் அதற்கு மறுநாள் 23.04.2021 அன்று பாடசாலைக்கு வந்த தாயார் அம் மாணவனை அழைத்து சென்றதாகவும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்பு**

முதலாவது முறைப்பாட்டாளாரது மகனான 2ஆம் முறைப்பாட்டாளர் யா/புனி அந்தோனியர் கல்லூரியின் மாணவன் எனவும், 2021.04.20 ஆம் திகதி 1ஆம் பிரதிவாதியான சஞ்சிகா பாலசுப்ரமணியம் எனும் பாடசாலையில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியரால் 2ஆம் பிரதிவாதிக்கு தாக்குதல் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

அத்தாக்குதலானது தடியொன்றினால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அத்தடி 2ஆம் முறைப்பாட்டாளராக வினோஜ் சாம் என்பவரது கண்ணில்பட்டு சிவந்து வீக்கமடைந்து இருப்பதாகவும் 1ஆம் பிரதிவாதியால் அது பற்றி எந்தக் கவனிப்பும் செலுத்தாமையையும் அவதானிக்க முடிகிறது. எனினும் குறித்த தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அந்தத்தடி 2வது

முறைப்பாட்டடாளரது கண்ணில் பட்டமையை 1ஆம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளமையும் அவதானிக்க முடிகிறது.

2ஆம் முறைப்பாட்டாளரான வினோஜன்சாம் என்பவரால் 2ஆம் பிரதிவாதியான பாடசாலையின் அதிபருக்கு குறித்த தாக்குதல் தொடர்பாக அறிவித்த முதல் சந்தர்ப்பத்திலே அவர் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காது அம்மாணவனை விடுதிக்கு அனுப்பியுள்ளதாகவும், பின்னர் மாலை 3 மணியளவில் பாடசாலையின் வேரொரு மாணவனுடன் 2ஆம் முறைப்பாட்டாளரை ஊர் காவற்துரை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தாலும் ஆசிரியையின் தாக்குதலால் கண்ணில் காயம் ஏற்பட்டதை கூற வேண்டாம் என 2ஆம் பிரதிவாதியான பாடசாலையின் அதிபர் அறிவுரை வழங்கியுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

அத்துடன் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்ததன் பின்னர் 2ஆம் முறைப்பாட்டாளரான வினோஜன் சாம் என்பவர் தாம் முகம்கொடுத்த சம்பவத்தை தன் தாயாரான 1ஆம் முறைப்பாட்டாளருக்கு தொலைபேசி மூலம் அறிவித்ததாகவும் அவ்விதம் 2ஆம் பிரதிவாதியான அதிபரிடம் அறிவிக்காது குறித்த விடயத்தை தன் தாயாரிடம் கூறியமையால் 2ஆம் பிரதிவாதியால் 2ஆம் முறைப்பாட்டாளருக்கு தாக்குதல் இடம்பெற்றுள்ளதையும் அவ்விதம் 2ஆம் முறைப்பாட்டாளர் தாக்கியமையையும் ஒப்புக்கொண்டுள்ளதை காண முடிகிறது.

மேலும் 2வது முறைப்பாட்டாளரான வினோஜன் சாம் என்பவர் 2021.04.23ஆம் தினமன்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2021.04.23 ஆம் தினமன்று அவரை சோதனைக்கு உட்படுத்திய கஜேந்தினி என்னும் வைத்தியர் வழங்கிய சட்ட வைத்திய அறிக்கையின் படி கூர்மையில்லாத ஆயுதம் ஒன்றினால் ஏற்படுத்தப்பட்டதாக கூற முடியுமான தீவிரமில்லாத 09 காயங்கள் 2வது முறைப்பாட்டாளரது வலது கண் மற்றும் இடது மற்றும் வலது தொடை பகுதிகயில் அடையாளம் காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. அதன் படி பின்வரும் காயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1.Abrasion over upper eye lid of right eye measuring 0.5 cm

2.Sub conjunctival hemorrhage of right eye

3. Abrasion over posterior surface of right side upper thigh measuring 1*1 cm

4.Trump line contusion over posterior surface of right side upper thigh measuring 7*1 cm

5.Trump line contusion over posterior surface of right side upper thigh measuring 7*1 cm

6.Trump line contusion over posterior surface of right side upper thigh measuring 7*4 cm

7.Trump line contusion over posterior surface of left side upper thigh measuring 9*1 cm

8. Trump line contusion over posterior surface of left side upper thigh measuring 9*1 cm

9. Trump line contusion over posterior surface of left side upper thigh measuring 9*1 cm

2ஆம் முறைப்பாட்டாளரினால் குறிப்பிடப்பட்ட 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளால் தனக்கு தாக்குதல் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்படும் உடலின் பகுதிகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையினுள் காயங்கள் காணப்படுவதாக கூறப்படும் இடங்கள் ஒன்றுக்கொன்று சார்பாக காணப்படுவதனாலும் பிரதவாதிகளால் தாக்குதல் இடம்பெற்றமையை நிராகரிக்காமையாலும் 2ஆம் முறைப்பாட்டாளருக்கு தாக்கி காயம் ஏற்படுத்தியமை தொடர்பாக 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகள் பொறுப்பில் பிணைக்கப்படுகின்றமை உறுதியாகின்றது.

**முடிவு.**

மேலே குறிப்பிட்ட சகல விடயங்களையும் மொத்தமாக கவனித்துக்கொள்ளும் இடத்து 1வது பிரதிவாதி மற்றும் 2வது பிரதிவாதியால் 2ஆம் முறைப்பாட்டாளரான ஏ. சாம் என்பவருக்கு தாக்குதல் இடம்பெற்றுள்ளமையை ஒப்புக்கொண்டமையாலும் ஏ. சாம் என்பவரின் சட்ட வைத்திய அறிக்கையின் படி அவரது உடலில் தீவிரமில்லாத 9 காயங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையாலும் அதில் காயங்கள் காணப்படும் இடங்கள் அவர் தாக்கப்பட்டதாக கூறப்படும் இடங்களுடன் சமனாக காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே 2ஆம் முறைப்பாட்டாளரான ஏ. சாம் என்பவர் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளமை உறுதியாவதனால் 1978 இலங்கையின் 2ஆம் குடியரசு யாப்பில் 3ஆம் அத்தியாயமான அடிப்படை உரிமைகள் அத்தியாயலத்தில் 11ஆம் உறுப்புரை மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஆளொவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது என்ற அடிப்படை உரிமையானது 2ஆம் முறைப்பாட்டாளருக்கு 1ஆம் பிரதிவாதியான சஞ்சிகா பாலசுப்ரமணியம், மற்றும் 2ஆம் பிரதிவாதியான அருட் சகோதரன் அன்ரன் அமலதாஸ் என்பவர்களால் மீறப்பட்டுள்ளது என இதனால் முடிவு செய்யப்படுகிறது.

**அதன்படி பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.**

1. 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளால் ரூபாய் 5000 வீதம் 10,000ரூபாய் 2ஆம் முறைப்பாட்டாளருக்கு தண்டப்பணமாக செலுத்த வேண்டும்.
2. இந்த சம்பவம் தொடர்பில் 1ஆம் மற்றும் 2ஆம் முறைப்பாட்டாளருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

24.12.2024
~~11.01~~ .2024 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரையை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறுமாறு 1996ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 15(2) ஆம் உறுப்பரையின் பிரகாரம் பிரதிவாதிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

அவ்வாறு இப்பரிந்துரையை பிரதிவாதிகளினால் நிறைவேற்றப்பட்டமை அல்லது நிறைவேற்றப்படாமை தொடர்பாக முறைப்பாட்டாளர் மூலமும் மேலே குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணைக்குழுவிற்கு அறியத்தரவேண்டியுள்ளதோடு, அக்காலத்திற்குள் குறிப்பிட்ட அறிவித்தலை அறிவித்திருக்கவில்லையாயின் பிறகு முன்வைக்கப்படும் வேண்டுகோள் தொடர்பில் கருத்திற் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் மேலும் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

தவிசாளர் - ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Nimal G. Punchihewa
Senior Counsel
Commissioner
Human Rights Commission of Sri Lanka

பிரதி :

01. அமைச்சர் - கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை. - (தகவலுக்காக)

02. செயலாளர் - கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை - ( பரிந்துரையை நிறைவேற்றல்)